**முதலாவது கூடுதல் சார்பு நீதிமன்றம், விழுப்புரம்**

**முன்னிலை : திருமதி. M.S. வரலட்சுமி, பி.ஏ., பி.எல்.,**

**முதலாவது கூடுதல் சார்பு நீதிபதி, விழுப்புரம்**

**2026ம் ஆண்டு மார்ச் திங்கள் 25ம் நாள் புதன்கிழமை**

**அசல் வழக்கு எண்.453/2025**

**(CNR.NO.TNVP02-000712-2025)**

அருண் .... வாதி

/எதிர்/

ஏழுமலை .... பிரதிவாதிகள்

இவ்வழக்கு 20.06.2025, 08.07.2025 ஆகிய தேதிகளில் தாக்கல் செய்யப்பட்டு 18.07.2025 அன்று கோப்புக்கு எடுக்கப்பட்டு 16.03.2026 தேதியில் இறுதியான விசாரணைக்காக என் முன்னர் வந்தபோது வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K. மின்னல் அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதிக்கு அழைப்பாணை சார்வாகி அவர் வழக்கறிஞர் மூலம் ஆஜராகிவிட்டு பின் நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகாததால் அவர் தோன்றாத்தரப்பினராக தீர்மானிக்கப்பட்டும், வாதி தரப்பு வாதத்தை கேட்டும் வழக்கு ஆவணங்களை பரிசீலினை செய்தும், இது நாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்......

**தீர்ப்புரை**

தாவா பிராமிசரி நோட்டு தொகையான ரூ.1,46,227/- மற்றும் அசல் தொகை ரூபாய் 1,10,000/-க்கு பின் வட்டியும், நீதிமன்ற செலவும் வாதிக்கு பிரதிவாதியாலும், பிரதிவாதிக்குப் பாத்தியமான ஸ்தாவர ஜங்கம

சொத்துக்களாலும் கிடைக்கும் படி தீர்ப்பளிக்க வேண்டி வாதியால் இவ்வழக்கு தாக்கல்.

## 2. வழக்குரை சுருக்கம் :-

வாதியிடமிருந்து பிரதிவாதி கடந்த 22.09.2022 தேதியில் வாதியின் செங்கல் சூளைக்கு கல் அறுக்கும் வேலைக்காகவும், பிரதிவாதியின் குடும்பச் செலவிற்காகவும் வேண்டி, வாதியிடம் இருந்து ருந்.1,10,000/- ரொக்கமாக கடனாக பெற்றுக்கொண்டு, அன்றைய தினமே வாதி பெயருக்கு, பிரதிவாதி ரூ.20/- கொண்ட NJS பத்திரத்தில் முறைப்படி தாவா பிராமிசரி நோட்டு வாசகப்படி சரியான பிரதிபிரயோஜனத்துடன் கொடுக்க வேண்டிய தொகை ரூ.1,10,000/- தொகைக்கு மாதம் 1க்கு ரூ.100/-க்கு வட்டி ரூ.1/- ஆக சேர்த்து கூடிய அசல், வட்டி தொகையை வாதி வேண்டும்போது, வாதிக்கோ அல்லது வாதி உத்தவு பெற்றவருக்கோ திருப்பி கொடுப்பதாக ஒப்புக்கொண்டு தாவா பிராமிசரி நோட்டு, வாதி பெயருக்கு பிரதிவாதி குடியிருந்து வரும் பெண்ணைவலம் கிராமத்தில் உள்ள பிரதிவாதியின் வீட்டில் சாட்சிகள் முன்னிலையில் எழுதிக்கொடுத்துள்ளார் என்றும் அதன் பின்னிட்டு பிரதிவாதி, வாதியின் செங்கல் சூளைக்கு, செங்கல் அறுக்கும் வேலைக்கு செல்லாமலும், வாதியிடம் பெற்ற தாவா கடனை திருப்பிச் செலுத்தாமலும் இருந்துள்ளார் என்றும் அதன் பின்னிட்டு பிரதிவாதி, வாதி தாவா ரூ.20/- கொண்ட NJS பத்திரத்தில் கண்ட கடன் தொகையை திருப்பி செலுத்தும்படி பலமுறை நேரில் கேட்டும், அதற்கு பிரதிவாதி கொடுப்பதாக மட்டும் கூறிக்கொண்டு, தாவா அசல் மற்றும் வட்டி தொகையை கொடுக்காமல் வீண் காலதாமதம் செய்து, அதனால் வாதிக்கு மிகுந்த மன உளைச்சலை ஏற்படுத்தி வந்துள்ளார் என்றும் அதனால் மேற்படி பிரதிவாதியின் செயல் வாதியை ஏமாற்றும் நோக்கில் அமைந்துள்ளதாகவும்

என்றும் பின்னிட்டு பிரதிவாதி, வாதிக்கு எழுதிக்கொடுத்த NJS பத்திரத்தில் கண்ட அசல் மற்றும் அதற்குரிய வட்டியையும் சேர்த்து வாதி வசம் செலுத்தி பைசல் செய்துவிட்டு, பிரதிவாதி, கடந்த 22.09.2022 தேதியில் வாதி பெயருக்கு எழுதிக்கொடுத்த NJS பத்திரத்தினை திரும்ப பெற்றுக்கொள்ளும்படியும், தவறும் பட்சத்தில் பிரதிவாதி மீதும், பிரதிவாதிக்கு பாத்தியமான ஸ்தாவர ஜங்கம சொத்துக்கள் பேரில் உரிய நீதிமன்றத்தில் தாவா தாக்கல் செய்து, மேற்படி பத்திரத்தில் கண்ட அசல் மற்றும் வட்டித் தொகையை சேர்த்து, பிரதிவாதிக்குப் பாத்தியமான அசையும் மற்றும் அசையா சொத்துக்களை நீதிமன்றத்தின் மூலம் ஜப்தி செய்து, வாதிக்குச் சேரவேண்டிய அசல்மற்றும் வட்டித்தொகைக்காக பிரதிவாதியின் சொத்துக்கள் மீது ஏல நடவடிக்கை மேற்கொண்டு, வாதிக்குச் சேரவேண்டிய தொகையை அடையநேரிடும் என்றும் மேலும் இதனால் வாதிக்கு ஏற்படும் சகல கஷ்ட நஷ்டங்களுக்கும் பிரதிவாதியே பொறுப்பேற்பதோடு, மற்றும் உரிய இதர பரிகாரங்களை பிரதிவாதியின் சொத்துக்கள் மீது ஏல நடவடிக்கை மேற்கொண்டு, வாதிக்குச் சேரவேண்டிய தொகையை அடையநேரிடும் என்றும் மேலும் இதனால் வாதிக்கு ஏற்படும் சகல கஷ்ட நஷ்டங்களுக்கும் பிரதிவாதியே பொறுப்பேற்பதோடு மற்றம் உரிய இதர பரிகாரங்களை பிரதிவாதியின் செலவிலேயே உரிய நீதிமன்றத்தின் மூலம் வாதி அடைய நேரிடும் என்பதை குறிப்பிட்டு கடந்த 24.12.2024 அன்று வாதி அவரது வழக்கறிஞர் மூலம் பிரதிவாதிக்கு அறிவிப்பு கொடுத்ததார் என்றும் வாதி அவரது வழக்கறிஞர் மூலம் கொடுத்த அறிவிப்பை, பிரதிவாதி 31.12.2024 அன்று பெற்றுக்கொண்டார் என்றும் மேலும் பிரதிவாதியின் செயல், வாதியிடம் பெற்றக்கடனை ஏற்றுக்கொண்டபடி பைசல் செய்யாமல் ஏமாற்றும் விதமாகவே செயல்பட்டு வருகிறார் என்றும் வாதியிடம், தாவா பிராமிசரி நோட்டில் கண்ட தொகையினை பெற்றுக்கொண்ட பிரதிவாதி தனது குடும்ப நலனுக்கு பலன்

அடைந்துக்கொண்டு, ஆனால் மேற்படி அசல் மற்றும் வட்டியை திருப்பித் தராமலும், வீண் காலம் கடத்தி வருவதாலும், வாதிக்கு சமூகம் நீதிமன்றத்தில் இந்த தாவாவை தாக்கல் செய்ய வேண்டிய அவசியம் நீதியின்பால் ஏற்பட்டுள்ளது என்றும் பிரதிவாதி மதராஸ் ஆக்ட் IV of 1938 படி விவசாயி என்பதால் அதனால் தாவா பிராமிசரி நோட்டுக்குரிய தொகைக்கு 9% வீதம் வாதி வட்டி கோருகிறார் என்றும் கூறி தாவா தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. இவ்வழக்கில் பிரதிவாதிக்கு அழைப்பாணை சார்வாகி அவர் வழக்கறிஞர் மூலம் ஆஜராகிவிட்டு பின் பதிலுரைக்கு போடப்பட்டிருந்த நிலையில் பதிலுரை தாக்கல் செய்யாததால் கடந்த 31.10.2025 அன்று அவர் தோன்றாத்தரப்பினராக தீர்மானிக்கப்பட்டுள்ளார்.

4. வாதி தரப்பில் வாதி தன்னை வா.சா.1 ஆக விசாரித்துள்ளார். வா.சா.1 மூலம் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.4 வரையிலான சான்றாவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளது. வாதி தரப்பில் வா.சா.2 ஆக NJS பத்திரத்தை எழுதிய திரு.முருகன் என்பவர் விசாரிக்கப்பட்டுள்ளார். பின் வாதி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டு வாதி தரப்பு வாதம் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.

**5. தீர்வுக்கான பிரச்சனை :-**

இவ்வழக்கில் வாதி கோரிய பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதா அல்லது இல்லையா?_என்பதே இவ்வழக்கில் தீர்வு காண வேண்டிய பிரச்சனை ஆகும்.

**6. தீர்வு :-**

வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில் பிரதிவாதி வாதியிடம் கடந்த 22.09.2022 அன்று ரூ.1,10,000/- ரொக்கத்தை கடனாக பெற்றுக் கொண்டு மேற்படி தொகைக்கு ரூ.100/-க்கு மாதம் ஒன்றுக்கு வட்டி ரூ.1/- வீதம் ஆக சேர்த்துக் கூடிய அசல் வட்டி தொகையை வாதி வேண்டும் போது வாதியிடமாவது அல்லது வாதி அதிகாரம் பெற்றவரிடமாவது ரொக்கமாய் கொடுப்பதாக ஒப்புக் கொண்டு வாதி பேருக்கு பிரதிவாதி ரூ.20/-க்கான NJS பத்திரத்தில் ரூ.1,10,000/-க்கு பெண்ணைவலம் கிராமத்தில் எழுதிக் கொடுத்தார் என்றும், தாவா NJS பத்திரத்தை பிரதிவாதி எழுதிக் கொடுத்த பிறகு தாவா பிராம்சரி நோட்டுப்படி சேர வேண்டிய அசல் வட்டி தொகையை கொடுத்து பைசல் செய்யும்படி வாதி பிரதிவாதியிடம் பல முறை நேரில் கேட்டதில், அதற்குப் பிரதிவாதி, தாவா NJS பத்திர படி சேர வேண்டிய அசல்வட்டி தொகையை கொடுத்து பைசல் செய்யாமல் வீண் விரையம் செய்து வந்தார் என்றும் பின்னர் அந்த கடனை நோட்டிஸ் மூலம் கேட்டும் பிரதிவாதி கடனை திருப்பி தரவில்லை என்றும் வாதி தன் வழக்கை வா.சா.1, வா.சா.2 சாட்சியம் மூலம் மெய்பித்துள்ளார் என்றும் கூறி வழக்கை தீர்ப்பு செய்யுமாறு வேண்டி வாதிட்டார்.

7. வாதி தரப்பு வாதமும் வழக்கு ஆவணமும் கவனத்துடன் பரிசீலித்து கருத்தில் கொள்ளப்பட்டது.

8. வா.சா.1/வாதி தனது முதல் விசாரணை சாட்சிய பிரமாண வாக்கு மூலத்தில் வழக்குரை சங்கதிகளை அனுசரித்து சாட்சியம் அளித்துள்ளார். வா.சா.2/ NJS பத்திரத்தை எழுதியவர் மேற்படி வா.சா.1 சாட்சியத்திற்கு ஒத்திசைந்து

சாட்சியம் அளித்துள்ளார்.

9. வா.சா.ஆ.1 தாவா கடனுறுதி பத்திரத்தை கருத்தில் கொண்டதில் பிரதிவாதி வாதியிடம் இருந்து ரூ.1,10,000/-ஐ கடனாக பெற்று தாவா கடனுறுதி பத்திரத்தை 22.09.2022 அன்று வாதி பெயருக்கு எழுதிக்கொடுத்திருப்பதும் அதற்காக பிரதிவாதி எவ்வித தொகையும் வரவு வைக்காமல் இருப்பதும் புலனாகிறது.

10. வா.சா.ஆ.2 அறிவிப்பு மற்றும் அஞ்சலக ரசீது மூலம் வாதி தனது வழக்கறிஞர் மூலம் பிரதிவாதிக்கு தாவா கடனுறுதி பத்திர பணத்தை கேட்டு 24.12.2024 தேதியிட்டு அறிவிப்பு அனுப்பியிருப்பது புலனாகிறது.

11. வா.சா.ஆ.3 அஞ்சலக ஒப்புகை அட்டை மூலம் வாதி தனது வழக்கறிஞர் மூலம் அனுப்பிய அறிவிப்பை பிரதிவாதி பெற்றுக்கொண்டிருப்பது புலனாகிறது.

12. வா.சா.ஆ.4 ஆதார் அட்டை மூலம் வாதி வழக்குரை முகவரியில் வசித்துக்கொண்டிருப்பது புலனாகிறது.

13. பிரதிவாதி வழக்குரை சங்கதிகளை மறுத்தும் எதிர் வழக்குரை தாக்கல் செய்யவில்லை. அவர் வா.சா.1, வா.சா.2 மற்றும் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.4 வரையிலான சாட்சிய சான்றாவணங்களை குறுக்கு விசாரணை செய்து மறுக்கவில்லை. அவர் வா.சா.ஆ.1 கடனுறுதி பத்திரத்தின் கடன் நிலுவையை செலுத்தவும் இல்லை. எனவே வாதி பிரதிவாதிக்கு எதிராக தனது வழக்கை தன் தரப்பு சாட்சியங்கள் மூலம் மெய்பித்துள்ளது புலனாகிறது.

14. மேலே கண்ட காரணங்களினால் வாதி தரப்பு வாதம் ஏற்கப்பட்டு இந்த வழக்கானது வாதி கோரியவாறு பிரதிவாதிக்கு எதிராக தாவா தொகையான ரூ.1,46,227/- மற்றும் அசல் தொகை ரூ.1,10,000/-க்கு தாவா தாக்கல் தேதியில் இருந்து தீர்ப்பாணை தேதி வரை 9% p.a. பின்வட்டியும் அசல் தொகை ரூ.1,10,000/-க்கு தீர்ப்பாணை தேதிக்குப்பிறகு தாவா தொகை வசூலாகும் வரை 6% p.a பின்வட்டியும் பிரதிவாதியால் வாதிக்கு கிடைக்கும்படி செலவுத்தொகையுடன் தீர்ப்பு செய்யத்தக்கது என்று இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

**முடிவாக,** வழக்கானது வாதி கோரியவாறு பிரதிவாதிக்கு எதிராக தாவா தொகையான ரூ.1,46,227/- மற்றும் அசல் தொகை ரூ.1,10,000/-க்கு தாவா தாக்கல் தேதியில் இருந்து தீர்ப்பாணை தேதி வரை 9% p.a. பின்வட்டியும் அசல் தொகை ரூ.1,10,000/-க்கு தீர்ப்பாணை தேதிக்குப்பிறகு தாவா தொகை வசூலாகும் வரை 6% p.a பின்வட்டியும் பிரதிவாதியால் வாதிக்கு கிடைக்கும்படி செலவுத்தொகையுடன் தீர்ப்பு செய்யப்படுகிறது. தொகை செலுத்த கால அவகாசம் 2 மாதங்கள்.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு இந்நீதிமன்றத்தில் 25.03.2026 புதன்கிழமை ஆகிய இன்று அவையறிய பகரப்பட்டது.

M S VARALAKSHMI
Digitally signed by M S VARALAKSHMI

முதலாவது கூடுதல் சார்பு நீதிபதி,
விழுப்புரம்.

**<u>இணைப்பு :-</u>**

**<u>வாதி தரப்பு சாட்சிகள் :-</u>**

வா.சா.1 திரு.அருண் (வாதி)

வா.சா.2 திரு.முருகன்

**<u>வாதி தரப்பு சான்றாவணங்கள் :-</u>**

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 22.09.2022 | வாதியிடம் பிரதிவாதி ரூ.1,10,000/- ரொக்கம் பெற்றுக்கொண்டு வாதி பெயருக்கு எழுதிக்கொடுத்த தாவா கடனுறுதி பத்திரம் (அசல்) |
| வா.சா.ஆ.2 | 24.12.2024 | வாதி தனது வழக்கறிஞர் மூலம் பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு (அலுவலக நகல்) மற்றும் அஞ்சலக ரசீது |
| வா.சா.ஆ.3 | - | மேற்படி அறிவிப்பினை பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டை |
| வா.சா.ஆ.4 | - | ஆதார் அட்டையின் நகல் (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு நகல் குறியீடு செய்யப்படுகிறது) |

**<u>பிரதிவாதி தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம் :-</u>**

(இல்லை)

M S VARALAKSHMI

Digitally signed by M S VARALAKSHMI

முதலாவது கூடுதல் சார்பு நீதிபதி,
விழுப்புரம்.